மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண். 55/2019

**2025–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 03–ம் நாள் திங்கள் கிழமை** பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **திருமதி. P.தேன்மொழி, உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்வராஜ் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | :செங்கமலை | வட்டம் | :வேப்பந்தட்டை |
| சாதி | :தழுதாழை | வயது | : 52/2025 |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

(i) 07.07.1980ம் தேதியிட்டு எனது அம்மா அங்கம்மாள் கிரையம் பெற்ற சொத்தின் கிழமேல் ஜாதியடி தெரியுமா என்றால் வடக்குதெற்கு 20 ஜாதியடி கிழமேல் 21 ஜாதியடி என்று நினைக்கிறேன், அளவு சரியாக தெரியவில்லை. மேற்படி கிரைய பத்திரத்தில் கிரைய பத்திரத்தின் சொத்து தென்வடல் சந்துக்கு மேற்கே என்று கண்டுள்ளது என்றால் சரிதான். எனது அம்மா வாங்கிய சொத்தின் பழைய சர்வே எண்.171/2 என்றால் சரிதான். அதன் புதிய சர்வே எண்.241/30 என்றால் சரியல்ல, 241/31 ஆகும். சர்வே எண்.241/30 தான் எனது தாயார் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் வாங்கிய சொத்தை FMBல் தென்வடல் மற்றும் மேல்புறம் கீழ்புறம் பாதையில் 7 மீ உள்ளதாக கண்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. எனது தாயார் கிரையம் பெற்ற அளவை விட கூடுதலாக தென்வடலில் 2¾ அடியும், கிழமேலில் 2 அடியும் காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் அழகுதுரை என்பவரிடம் எந்த தேதியில் கிரையம் பெற்றேன் என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.

(ii) 01.11.2004ம் தேதி அழகுதுரையிடம் நான் கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. மேற்படி தேதி கிரையபத்திரத்தில் பழைய சர்வே எண்.171/2 புதிய சர்வே எண்.241/27 என்ற சொத்துக்களை கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் 01.11.2004ம் தேதியிட்டு அழகுதுரை என்பவரிடமிருந்து நான் கிரையம் பெற்றதற்கான கிரையம் பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அது (அது **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) வா.சா.ஆ.7 ஆவணத்தில் கிரைய பத்திரத்தின் சொத்து அளவாக கிழமேல் ஜாதியடி 16 தென்வடல் 15 ஜாதியடி என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அசல் பத்திரத்தை பார்த்து தான் சொல்லமுடியும். வா.சா.ஆ–7 ஆவணத்தில் மேற்படி காலியிடத்திற்கு கிழமேல்

வீதியிலிருந்து 3 அடி அகலம் உள்ள தென்வடல் பாதை வழியே போய் வரும் பாதை பாத்தியம் என்று கண்டுள்ளது என்றால் சரிதான்.

(iii) நான் கிரையம் பெற்ற வா.சா.ஆ.7 ஆவணத்தில் கண்டுள்ள அளவை விட FMB ல் கிழமேல் தென்புறமாக 14½ அடியும், வடபுறமாக 12 அடியும் கூடுதலாகவும் தென்வடல் இருபுறமும் 3 அடி 2 அங்குலம் கூடுதலாக உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.7 ஆவணத்தில் கண்டுள்ள நான்கெல்லை விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ–7 ஆவணத்தில் நான்கெல்லை விவரத்தில் கிராம பொதுமனைக்கும், கீதா கிரையம் பெற்ற மனைக்கும் மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எங்கள் வீட்டிற்கு கீழ்புறம் 2.8 மீ அகலத்தில் ஒரு சந்து இருந்தது என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் 07.07.1980 ம் தேதியிட்டு எனது தாயார் அங்கம்மாள் என்பவர் அய்யாக்கண்ணு என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற கிரையபத்திரத்தின் சான்றிட்ட நகல் என்றால் நான் கண்கண்ணாடியை கொண்டு வராததால் ஆவணத்தை என்னால் பார்க்க முடியவில்லை.

(iv) அங்கமுத்து மகன் ராஜன் என்பவர் எங்கள் ஊரிலேயே குடியிருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர் வீடு கட்டி 2,3 மாதங்கள் எங்கள் ஊரில் குடியிருந்தார். பிறகு தான் சென்றார். அவ்வாறு ஒருநபர் குடியிருக்கவில்லை என்று சொன்னாலும் நான் இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்தின் நீள அகலம் குறிப்பிட்டிருக்கவில்லை என்று சொன்னால் சரிதான். பின்னிட்டு சாட்சி தானாக முன்வந்து அளவீடுகள் குறிப்பிட்டிருக்கிறது என்று கூறுகிறார். பி.சா.ஆ.2 ஆவணத்தில் கண்டுள்ள நான்கெல்லை விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான்கெல்லை சொல்லமுடியுமா என்றால் கணேசன் மனைக்கு மேற்கு, பெருமாள் மனைக்கு தெற்கு, தென்வடல் வீதிக்கு வடக்கே, அங்கம்மாள் மனைக்கு கிழக்கு. எனது மனைவிக்கு தாவா சொத்தை துரைசாமி எப்போது கிரையம் கொடுத்தார் என்றால் 30.10.2001 ம் தேதி கிரையம் கொடுத்தார். அது பி.சா.ஆ.4 ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள நான்கெல்லை விவரம் தெரியுமா என்றால் தெரியும் அங்கம்மாள் மனைக்கு கிழக்கே, ரத்தினம் மனைக்கு மேற்கே, கிழமேல் வீதிக்கு வடக்கே, பெருமாள் மனைக்கு தெற்கே என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

V) என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.3 ஆவணத்தில் துரைசாமி என்பவர் பெரியசாமி மற்றும் சங்கரவடிவு ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்புரை என்றால் சரிதான். மேற்படி வழக்கில் வாதி கணேசனோ அவரது தாய், தந்தையரோ தரப்பினராக இல்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ஆவணத்தில் சர்வே எண்.241/31ல் 51 ச.மீ என்று கண்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தில் பழைய சர்வே எண்.171/2ல் ஒரு செண்ட் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். 21 நீளம், 21 அகல் என்று கண்டுள்ளது. சர்வே எண்.241/31ல் 51 ச.மீ என்று கண்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.4 ஆவணத்திலும் 21 X 21 ச.அடி என்று கண்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ஆவணத்தில் சந்திற்கும் சேர்த்து தவறுதலாக 51 ச.மீ என தவறுதலாக பட்டா வழங்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. நான் பெற்ற கிரையத்திற்கு மாறுதலாக கூடுதலாக 11 ச.மீட்டருக்கு நான் எவ்வித உரிமையும் கோர இயலாது என்றால் சரியல்ல.

vi) எனது மனைவி தாவா சொத்தை பொறுத்து மற்றொரு வழக்கு தாக்கல் செய்யத விவரம் தெரியுமா என்றால் தெரியும், அந்த வழக்கு எண் OS.No.19/2019 என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு கிழக்கே ரத்தினம் என்பவரின் வீடு இருந்தது என்றாலும் அவருக்கு அரசு அடமானமாக இடம் கொடுத்து பின்னிடடு தொகுப்பு வீடு கொடுத்தார்கள் என்றால் சரிதான். தொகுப்பு வீடு இருபுறமும் சறுகல் வடிவத்தில் கொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி வீடு பழுதடைந்த நிலையில் மேற்புற கூரையை மட்டும் விடுத்துவிட்டு வீட்டை சீரமைத்தார் என்றால் சரிதான். அந்த வீட்டை புதுப்பித்து தான் தற்போது வாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் அந்த இடம் இல்லாமல் வேறு இடங்களை சேர்த்து கட்டியுள்ளார். வாதி அவருக்கு பட்டா வழங்கிய இடத்தில் தான் 2013ம் ஆண்டு வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் வீட்டை அவரது பட்டா இடத்தில் கட்டியுள்ளார். படிகட்டு மற்றும் Bathroom அதற்குரிய நடைபாதைகளை எங்கள் இடத்தில் கட்டியுள்ளார். மேற்படி தொகுப்பு 1998ம் ஆண்டிலேயே கொடுக்கப்பட்டது என்றால் வருடம் எனக்கு சரியாக தெரியவில்லை. வாதியின் Bathroom, வாயிற்படி இவையெல்லாம் தெரியம்படி கேமரா பொருத்தியுள்ளேன் என்றால் சரிதான். நாங்கள் வீட்டில் இல்லாததால் பாதுகாப்பிற்காக வைத்துள்ளேன். நான் 20 வருடமாக Bangalore ல் குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்பு எனது அக்கா குடியிருந்தார் என்றால் சரிதான். 2 மாதமாக எனது அக்கா குடியிருக்கவில்லை

என்றால் சரிதான். நான் கண் கண்ணாடியை அணிந்தால் எனக்கு எழுத்துக்கள் நன்றாக தெரியும் என்றால் சரிதான். வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கா வாய்தா அளித்து ஒத்திவைக்கப்படுகிறது.